**தமிழ் மொழி மற்றும் இலக்கியத்தின் சமகாலத்தன்மை**
**மலர் 2, இதழ் 2, 2021**
**ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்**
**பன்னாட்டுத் தரப்புத்தக எண் : 9788194845959**
**இணையதளம்: http://restpublisher.com/book-series/ctll/**

# சங்ககாலத்தில் மருத்துவ கலை

**ஈ.கவிதா**
செயின்ட் ஜோசப் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஓசூர் - 635 126

**முன்னுரை :** பழம்பெருமை வாய்ந்த நாடு நம் பாரத நாடு . எல்லா வளங்களும் இசெல்வங்களும் சிறப்பாக பெற்ற நம் நாட்டில் அரசியல் , பொருளாதாரம், கல்வி, வாணிகம், மருத்துவம் போன்ற துறைகளில் ஏற்றமும், பெருமிதமும் பெற்று திகழ்கிறது. சங்ககாலத்தில் மக்கள் மகிழ்வோடு, நல்ல பழக்க வழக்கத்தோடும், முறையான வாழ்க்கை சிறப்பாகவும் உணவு முறைகளை சீராகக் கொண்டும் வாழ்ந்து வந்துள்ளனர் . தாங்கள் தங்கள் உடல் நிலையை காத்துக் கொள்ள விளையாட்டுகள், தவ வலிமைகள், கட்டுப்பாடுகள் இவாழ்க்கைக்கு எதுவோ, அதனை கொண்டு சிறப்பாக விளங்கினர்.

உடல்நலம் காப்பதில் அதிக அக்கறை உடையவர்களாக இருந்தனர் . எதுவும் வந்த பிறகு கவலைப்படுவதை காட்டிலும்இ வருவதற்கு முன்னமே அதை தீர்ப்பதற்கான உணவு முறைகளை கையாண்டனர் . எவ்வளவு கவனமாக இருந்தாலும், நோய் என்பது இவர்களுக்கு தான் வரும் என்று குறிப்பிட்டு சொல்ல முடியாது . யாரை வேண்டுமென்றாலும் நோய் அண்டும். நோய்க்கு ஏழை, பணக்காரன் என்று தெரியாது. ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தான் கட்டாயம், அதிலிருந்து எப்படியாவது வெளி வந்து சீக்கிரம், சாதாரண வாழ்க்கை வாழ வேண்டுமே என்று ஆசையும் ஆவலமாக இருப்பார்கள் .

அதற்காக, அவர்கள் தேடுவது ஒரு பரிகாரம் ; என்ன செய்வது இயாரை பார்ப்பது, எங்கே போவது என்ற ஒரு கேள்விக்குறி அவர்களிடம் எழும்பும் . அப்படி தேடுவதில் அவர்களுக்கு கிடைக்கும் நிறைவே" மருத்துவம் "அக்காலத்தில் எல்லா துறைகளையும் கையாள்வதில் கைவந்தவர்களாக இருந்தனர் நம் முன்னோர்கள் . அதேப்போலவே, மருத்துவத் துறையிலும் சிறப்பான இடத்தை வகித்தனர் . எந்தவித தவறுகள் இல்லாமல் முறையான மருத்துவம் செய்து சாதனை படைத்துள்ளனர் . இக்காலத்தில் தீர்க்க முடியாத உயிர்கொல்லி நோய்களை, சங்க காலத்தில் வாழ்ந்த வைத்தியர்கள் மிக எளிதாக அருகாமையில் கிடைக்கக்கூடிய மூலிகைகள், வேர்கள் மர பட்டைகள் கொண்டு சிறப்பான முறையில் மருத்துவம் செய்து பெரும் வெற்றி அடைந்துள்ளனர் . அம்ருத்துவமுறை மக்களின் நோயை போக்குவதோடு மட்டுமல்லாது, அவர்களின் உள்நோயை தீர்க்கும் அருமருந்தாய் அமைந்துள்ளது.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

## மருத்துவம்( பொருள்)

மருத்துவம் என்ற சொல்லுக்கு "நோயை போக்குவதற்கு பயன்படும் பரிகாரம்" - வியாதிக்கு வைத்தியம்.

"உற்ற துன்பத்தை நீக்குவது மருத்துவம்"

மேலும், தெளிவாக கூற வேண்டும் என்றால், மனிதன் நோயிலிருந்து தன்னைக் காத்துக்கொள்வதற்கு தேவைப்படுகின்ற அத்தியாவாசியமான "ஒன்றாய் மருத்துவம் காணப்படுகிறது.

தொல்காப்பியரின் கூற்றுப்படி,

நோயும் வேட்கையும் நுகர்வு என்றாங்கு
ஆவயின் வருஉங் கிளவி எல்லாம்" [1]

( தொல் பொருள் பக். ( ஙசங 343) நூற்பா - 243)

நோய் என்பது துன்பம் ; இவன் துன்புற்றான் என்ற வழி, அஃதெத்தன்மையது என்றார்க்கு காட்டுவதே, 'துன்பத்தை அடைவதற்கு 'மருத்துவம் தேவைப்படுகிறது.

"நோயாளி, மருந்துகள், மருந்து, மருந்தைப் பிழையில்லாமல் உட்கொள்ளல் என்ற நான்கும் பிணிக்கு மருந்தாகும்"என்பது வள்ளுவரின் கருத்து.

## தமிழகத்தில் மருத்துக்கலை : ( சான்று )

சங்ககாலத்தில் மருத்துவக்கலையைப் குறித்துப் பார்க்கும் போது. அக்காலத்தில் தோன்றிய இலக்கியங்களின் வழியில் அறியமுடிகிறது.

"திருக்குறளில் - மருந்து " என்ற அதிகாரத்தில் மருத்துவக்கலை தமிழகத்தில் பரவியிருந்தது பற்றி தெளிவாக காணமுடிகிறது.கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் எழுந்த 'சிலப்பதிகார' நூலை படிக்கும் போது 'மருத்துவத்தை 'குலத்தொழிலாக கொண்டு வாழ்ந்தனர் என்றும், புகார் நகரில் ஒரு வீதியே அதற்காக இருந்தன என்றும் அறிந்து கொள்ள முடிகிறது.

## மருத்துவ வகைகள்

"மருந்து மரங்களையும் செடிகளையும் பயிரிட, அக்கால மக்கள் வரிசெலுத்தினர் என்று கல்வெட்டுகள் குறிக்கின்றன " [2]

(பக்-306) - தமிழக வரலாறு பண்பாடும்

மருத்துவமுறை இருந்தற்கான ஆதாரம் நாயன்மார்கள் வரலாறுகளில் காணமுடிகிறது. வடமொழியாளர்இ தமிழகத்தில் வாழத் தொடங்கியது முதல் அவர்களின் மருத்துவமுறையும் நம்நாட்டில் கால் பதித்தது.

பல்லவர்கள் காலத்தில் - ஆயுர்வேத மருத்துவமுறை
சோழர்காலத்தில் - சித்த மருத்துவமுறை
மொகலாயர் காலத்தில் - யுனானி மருத்துவமுறை
ஐரோப்பியர் காலத்தில் - அலோபதி மருத்துவமுறை
ஆங்கிலேயர் காலத்தில் - அலோபதி மருத்துவமுறை
ஜெர்மன் நாட்டு - ஹோமியோபதி

மருத்துவமுறை நம் நாட்டில் பரவியது . சிற்றூர் கிழவிகள் ' மாதர் மருத்துவம் ' என்ற மருத்துவ முறையும் அறிந்திருந்தனர் . பண்டைய காலம் முதலே,

தமிழகத்தில் ஒவ்வொரு பெண்மணிகளும் ' குடும்ப மருத்துவர் அறிவை ' பெற்றிருந்தன என்பதை தெளிவாக அறிய முடிகிறது .

## இலக்கியங்களில் மருந்து பற்றிய குறிப்புகள்

மருத்துவ நூலில் கூறப்பட்டபடிஇ ஒருவர் உடல் நோயை மாற்றி இன்பமாக வாழ்வதற்கு மருந்து பயன்படுகிறது. சுக்கு, மிளகு , திப்பிலி போன்ற மருத்துவ பொருட்களைக் கொண்டு மூன்று நீதிப் பொருட்களைச் சேர்த்து, நூறு பாடல்கள் கொண்ட நூலுக்கு 'திரிகடுகம்' என்று பெயரிட்டனர்.

கண்டங்கத்திரி வேர், சிறுவழுதுணை வேர், சிறு மல்லி வேர், நெருஞ்சி வேர், பெருமல்லி வேர் ஆகிய பஞ்ச மூலங்கள் மக்களின் பிணிகளைத் தீர்க்கும் . இதுவே 'சிறுபஞ்சமூலம் 'எனப்படும் நூல் ஆகும்.ஏலம், இலவங்கம், சிறுநாகப் பூ, மிளகு, திப்பிலி, சுக்கு என்ற ஆறுப் பொருட்களைத் சேர்த்து மக்களுக்கு பயன் தரக்கூடியதாக இருப்பதால் 'ஏலாதி' நூல் என்று பெயராகும்.

இந்த மருத்துவப்பொருட்களை பொடியாக செய்து நோய்க்கு மருந்தாக உட்கொள்கின்றனர் . அவை, உடல் நோயைப் போக்கியதோடு மட்டுமல்லாமல், உள்ள நோயையும் தீர்க்கிற அருமருந்தாய் அமைந்துள்ளது. இந்த மூன்று நூல்களையும் " பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள்" ஆகும். நம் முன்னோர்கள் மருத்துவ வகைப் பெயர்களையே நூல்களின் பெயர்களாக வழங்கி வந்தனர்.

## கண்ணப்ப நாயனார் புராணம் ( பெரியபுராணம்)

சிவலிங்கத்தின் கண்களிலிருந்து வடிந்த குருதியை நிறுத்தப் பச்சிலைகளைப் பறித்து, பிழிந்து அவற்றின் சாற்றைப்பயன்படுத்தினார் 'கண்ணப்ப நாயனார்'.

"மின்செய்வார் பகழிப்புண்கள் தீர்க்கும் மெய்
மருந்து தேடி சென்றார்
புனத்திடைப் பறித்துக்கொண்டு பூத நாயகன் பால் வைத்த
மனதினுங் கடிது வந்தம் மருந்துகள் பிழிந்து வார்த்தார்"[3]

( கண். புராணம் செ - 175 - 176)

## சம்பந்தர் புராணம்

பெரியபுராணத்தில் காணும் போது ' நின்ற சீர் நெடுமாறன் ' என்ற பாண்டிய மன்னன் வெப்பு நோயால் அவதியுற்றான் . மருத்துவர் பலர் பார்த்தும் தீராத நோயை, அதற்குரிய மருந்துக் கொடுத்து போக்கினார் என்ற செய்தி அறிய முடிகிறது.

"மருத்துவநூலவர் தங்கள் பல்கலைகளில் வகுத்த
திருத்த குந்தொழில் யாவையும் செய்தனர்" [4]

(சம்பந்தர் புராணம்செ - 713 )"

மேலும், சோழர் காலத்தில் தோன்றிய "பேரிலக்கியங்களில்" இருந்து மருந்துகளைக் குறித்துஇ அதாவது வேர்களையும், பச்சிலைகளையும் பயன்படுத்தி முறைகளையும் அறிய முடிகிறது.

சீவக சிந்தாமணி ( ஐம்பெரும் காப்பியம்):

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

"சீவகன்" ஒரு மருத்துவனாகவும், மருத்துவ அறிவை பெற்றவனாகவும் இருந்தான் என்பதை 'பதுமையார் இலம்பகத்தை படிக்கும்போது தெளிவாகிறது. பாம்பு கடித்த பதுமையாரை காப்பாற்ற நஞ்சின் தீக்குதற்குறிய மந்திரத்தைக் கூறி மருந்துகள் பலவற்றையும் செய்தான் என்பதை காண முடிகிறது.

"பதுமையைப் பாம்பு தீண்டிற் றென்றலும் பையுலெய்திக்
கதுமெனச் சென்று நோக்கிக் காய்சினங் கடிதற் கொத்த
மதிமிகுத்தவல நீக்கு மந்திரம் பலவுஞ் செய்தான்" [5]

( பதுமையார் இலம்பகம் பக்கம் 395
)

மேலும் இவ்விலக்கியத்தில், நாடிப் பார்க்க, போர் செய்து வரும்போது காயங்களை ஆற்றுவதற்கு, தான்றிக்காய், கடுக்காய், நெல்லிக்காய் பயன்படுத்தினர். ' பதுமுகன்' போரில் ஆழமான காயங்களுக்கு நெய் மற்றும் இதர மருந்து பொருட்களைக் கொண்டு புண்களுக்கு மருந்தாக பயன்படுத்தினான் என்று அறிய முடிகிறது . பயத்தை தெரிவிக்க முத்துமாலை, சந்தனம், பன்னீர் கலந்து தெளிக்கும்போது பயம் தெளிவாகும் என்ற செய்தியும் இந்த இலக்கியத்தை படிக்கும்போது அறிய முடிகிறது.

**கம்பராமாயணம்**

இராமன், இலக்குவனன் சீதையை மீட்கும் பொருட்டாக இலங்கையில் போர் புரியும்போது' இலக்குவனன் ' அடிபட்டு மயக்க நிலை அடைந்து, உணர்வு இழந்து இருக்கும் சமயத்தில் ' அனுமன் 'மருந்து மலையை ஒரு நொடி பொழுதிற்குள் கொணர்ந்தார்.

இறந்தவர்களுக்கெல்லாம் உயிரைத் தரும் வல்லமை படைத்தது அந்த 'சஞ்சீவி 'மருந்து . வேல் பாய்ந்து உணர்வற்று விழுந்தவருடைய உணர்வை மீண்டும் கொண்டு வருதல் என்பது அந்த மருந்திற்கு அற்பமான செயல் .

"தந்தனன் மருந்து தன்னைத்
தாக்குதல் முன்னே யோகம்
வந்தது. மாண்டார்க்கு எல்லாம்
உயிர்தரும் வலத்தது" [6]

. 1282 - பாடல் - 42 - யுத்த காண்டம் தொகுதி

**வால்மீகி இராமாயணத்தில் பயன்படுத்திய சிறப்பான மூலிகைகள்**

கரடிகளின் தலைவன் 'ஜாம்பவானின் 'அறிவுரையின் பேரில் சில மூலிகைகளை 'அனுமன்' தேடிச் சென்றான் .

- மிருக சஞ்சீவினி
- சந்தான கரணி
- விசல்ய கரணி
- சாவர்ண கரணி

**நன்மைகள்**

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

இறந்தவர்களை உயிர்ப்பிக்கும் ஆற்றல் உள்ளது துண்டிக்கப்பட்ட உறுப்புக்களை மறுபடியும் இனணக்கும் மூலிகை உடலினுள்பா ய்ந்த ஈட்டி, கத்தி போன்ற ஆயுதங்கள் உடைந்து உடலில் உள்ளையே தங்கிவிட்டால் அவற்றை கரைத்து வெளியேற்றும் மூலிகை. காயம்பட்ட இடத்தில் தோலின் மாற்றம், தழும்பு ஏற்படாமல் இருக்க அவற்றை நீக்கும் மூலிகை . "வால்மீகி மகரிஷி" இவற்றை குறித்து தனது நூலில் சிறப்பாக கூறியுள்ளார்.மேலும் கம்பராமாயணத்தில், வெட்டுண்ட பாகங்களை ஒட்டுதல் பற்றிய பாடல்;

"மெய் வருவகிரகளாகக்

கீண்டலும் பொருத்து விப்பதொரு மருந்து " [7].

என்று குறிப்பிடப்பட்டுள்ளது". இறந்து போன தசரனது உடம்பை கேகய நாட்டுக்குச் சென்று உள்ள பரதன் இ சத்துருக்கனர் வந்து ஈமக்கடன் செய்யும் வரை உடல் கெடாமல் இருப்பதால் இருப்பதற்காகத் தைலம் இட்டு வைத்ததை கூறுகிறது"[8]

( பாடல் - 608 - தைலம் சூட்டுபடலம் )

**மருத்துவன் - சான்று**

"தாமோதரனார்"[9] கடைச்சங்கத்து புலவருள் ஒருவர் மருத்துவனாக இருந்தார் என்ற செய்தியைக்அபிதான சிந்தாமணி தமிழ்க் களஞ்சியத்தில் பார்க்க முடிகிறது.

( அபிதான சிந்தாமணி - தமிழ்க் களஞ்சியம் ஆ. சிங்காரவேலு முதலியார். பக்கம் - 1544 )

சேக்கிழார் பிறந்த குன்றத்தூரில் 'ஒரு மருத்துவன் 'இருந்தான் என்று அவ்வூர் கல்வெட்டுக் கூறுகிறது . மேலும் இருவகை மருத்துவர் இருந்ததாகவும் இ மருத்துவமனைகள் சில வகை கோவில்களில் இருந்ததாகவும் கூறப்படுகிறது. ஒருவர் கைநாடி பார்த்து மருந்து கொடுப்பவர் மற்றொருவர் கட்டி முதலியவற்றை அறுத்துப் புண்களை ஆறவைப்பவர் "சல்லியக் கிரியை பண்ணுவான் (ளரசபநெ)எனப்பட்டார்"[10]

( தமிழக வரலாறும் பண்பாடும் பக்கம் 308 )

பிற்காலத்தில்'நாவிதரும் 'அறிவை வேலையில் ஈடுபட்டிருந்தனர் . அவர்கள் மருத்துவர் எனப்பட்டனர். . பிள்ளைப். பெற்றுத் துறையில் 'நாவிதர் 'மனைவிமாரும் ஈடுபட்டிருந்தனர் . நாவிதன் மனைவி 'மருத்துவச்சி' எனப்பட்டாள்.

'பண்ணன் பசிப்பிணி' மருத்துவன் என்ற பெயர் பெற்றான் என்பதைஇ இத்தொடர் நோய் நீக்கும் மருத்துவன் இருந்தார் என்பதை அறிய முடிகிறது.

**நோய்க்கான காரணம் :**

மனிதனுக்கு உடலுக்கு ஏற்றப்படி உணவும் செயல்களும் இருத்தல் வேண்டும் . இதில் ஏதேனும் ஒன்று மிகுதியாகவோ குறைவாகவோ இருந்தால் வாதம், பித்தம், கபம் என்னும் நோய்கள் ஏற்பட்டு அது அவனுக்கு துன்பத்தைத் தரும் என்று காரணம் கூறுகின்றனர் . மேலும், மனதில் ஏற்படும் கவலை, கோபம்,

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

பகை, வெறித்தனம், பேராசை, அகந்தை போன்ற தீய குணங்களால் ஒரு மனிதனுக்கு நோய் ஏற்படகூடும.

"பழவினையானும் காரணங்களானும் மக்கட்கு வாதம்பித்த சிலேத்யம
காரியங்களாகிய பிணிகள் உண்டாகும்" [11]

(அபிதான சிந்தாமணி பக்கம் - 1856 )

"மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர
வளிமுதலா எண்ணிய மூன்று" [12]

. . (அதிகாரம் - 95 குறள் - 941 )

உணவும் தொழிலும் மிகுந்தாலும் குறைந்தாலும் நோய் உண்டாகும்.

மருத்துவரின் செயல் :

"நோய்நாடி, நோய்முதல் நாடி, அது தணிக்கும்
வாய் நாடி வாய்ப்பச் செயல்"

வைத்தியன் நோயையும், அதன் காரணத்தையும், அதை நீக்கும் வழியையும் அறிந்து மருத்துவம் செய்ய வேண்டும். தவறு இல்லாமல் சரி செய்ய வேண்டும் . நோய் எப்படிப்பட்டது, நீண்ட கால நோயா ? அல்லது சாதாரண நோயா? அல்லது நாள்பட்ட நோயா? நோயாளி படும் வலி, வேதனை அறிந்து,தான் கற்ற மருத்துவத்தில் நெறி பிழை இல்லாதுஇ மருத்துவன் நோய் தீர்க்க வேண்டும்.

"உற்றான் அளவும்பிணியளவும்காணும்
கற்றான் கருதிச் செயல்". ( குறள். - 949 )

ஆரோக்கியமாக வாழ வழிமுறைகள் :

"ஒருவேளை உண்பவன் யோகி "
இருவேளை உண்பவன் போகி
மூன்று வேளை உண்பவன் ரோகி" [13]

அதிகம் உணவு உண்டால் நோய் தான் ஏற்படும் . அளவோடு உட்கொண்டால் ஆரோக்கியமாக வாழலாம்.

( பக்கம் - 9 மருத்துவ குணங்கள்)

மேலும், ஒருவன் தான் உண்ட உணவு செரித்து விட்டது என்று அறிந்த பிறகு, அடுத்து உணவு உண்ண வேண்டும். இப்படி சாப்பிட்டால் மருந்து தேவை இல்லை. செரிக்கத் தக்க உணவை உட்கொள்ள வேண்டும் . அளவறிந்து உண்பவன் நீண்ட நாள் வாழ்வான். உடம்புக்கு ஒத்துக் கொள்ளாத உணவை சாப்பிடுவதால் உடலுக்கு கேடு விளைவிக்கும்.

உடம்பிற்கு ஏற்ற உணவாயின் குறைவாய் உண்பது நல்லது. அப்போது அவன் மகிழ்ச்சிநீங்காது நிற்கும். அதிக உணவை உட்கொள்பவர்களுக்கு நோய் நீங்காது நிலைத்துநிற்கும்.

"மருந்தென வேண்டாவாம் யாக்கைக்(கு) அருந்தியது)

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்

அற்றது போற்றி உணின் " . திருக்குறள் - 942

## முடிவுரை

சங்ககாலத்தில் மருத்துவக்கலைமக்களின் வாழ்வில் முக்கிய ஒரு பெரும் பகுதியாக இருந்து வந்துள்ளதை சில இலக்கியங்களில் பார்த்தோம் . மருத்துவன் என்பவன் யார், அவர் செய்ய வேண்டிய அணுகுமுறை, ஆரோக்கியமாக வாழ வழிமுறைகள் எல்லாவற்றையும் இக்கட்டுரையில் சிலவற்றைப் பார்த்தோம் . எனவே, 'அளவறிந்து உணவை உட்கொண்டால் ' நோய் வருவதற்கான வாய்ப்பே இல்லை . மருந்தோ மருத்துவனோ தேவையில்லை என்பதை ஒரு வரியில்சொல்லிவிட முடியும். எனவே"மருந்தே இல்லாத உலகம் படைப்போம்" சங்க கால மக்களைப் போல உணவு முறைகளை பின்பற்றி வாழ்வோம் வளர்வோம்.

பதிப்புரிமை: ராமச்சந்திர கல்வி மற்றும் விளையாட்டு அறக்கட்டளை பதிப்பகம்